Owned and published by B. Arjunan from 17.2.102
D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed
by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24
Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Feb. 2011



DHANUSHKODI CHURCH BUILDING



TAMIL SEMMOZHI MANADU VISIT

## உங்கள் வானொலியில்

இலங்கை ஆசிய சேவை
SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்

## உங்கள் தொலைக்காட்சியில்

**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m
**IMAYAM TV**
EVERY Wednesday 6.30 - 6.45 a.m


**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: thewordofchrist@bsnl.in

*Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST



**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
**B. அர்ஜுனன்**

மரம் 11 பிப்ரவரி 2011 கனி 2

# இத்தாலி - ITALY



- கிரேக்கபாஷையில் இது இத்தாலியா (Italia) என்று அழைக்கப்பட்டது.
- பூகோள ரீதியாக இத்தாலி இரண்டு மாவட்டப் பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளது.
- இதன் தென் அடிப்பகுதி ஆட்டிரியாட்டிக் கடலிலிருந்து பிரிந்து மத்தியதரைக்கடலின் தீபகற்பமாயிருக்கிறது.
- கி.பி.509-ல் ரோம் குடியரசின் விரிவடைதல் பல போர்களை கொண்டுவந்து பின் கி.பி.264-ல் பல உடன்படிக்கையின் மூலம் வெவ்வேறு இத்தாலிய மாநிலங்களானது.
- தீபகற்ப இத்தாலியின் முதுகெலும்பாகவும் மிக அகலமாகவும் இருக்கும் அபன் மலையின் நீளவட்டம் வடக்கிலிருந்து தெற்குவரை 1050 கி.மீ. (660மைல்) பரவியுள்ளது.
- யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த ஆக்கில்லா அவன் மனைவி பிரிஸ்கில்லாளையும் பவுல் கொரிந்து பட்டணத்தில் சந்தித்தான் - அப்.18:2
- பவுல் அகிரிப்பாவினாலே அனுப்படும்போது காவலில் வைக்கப்பட்டிருந்த வேறுசிலரையும் சேர்த்து இத்தாலியாவுக்குப்போகிற அலெக்சந்தரியாபட்டணத்துக் கப்பலில் அனுப்பினான் - அப்.27:1,6



## கர்த்தருடைய ஊழியம் வளர்ந்து பெருக

### உதவ காத்திருக்கும் இவர்களோடு தொடர்புகொள்ளவும்


சகோ. ராஜாமணி
திருநெல்வேலி மாவட்டம்
919940841932


சகோ. மாயாண்டி
ஈரோடு மாவட்டம்
919373788465


சகோ. ராம்ராஜ்
திருப்பூர் மாவட்டம்
919487043077


சகோ. பூபதி
கரூர் மாவட்டம்
919487064827


சகோ. யோவான்
விழுப்புரம் மாவட்டம்
919940487200


சகோ. பெர்னான்டஸ்
தருமபுரி மாவட்டம்
919788319730


சகோ. ஜான் எஸ். நாதன்
திருவள்ளூர் மாவட்டம்
919444443378


சகோ. அர்ஜுனன்
திண்டுக்கல் மாவட்டம்
919443558041


"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 126

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. நீங்கள் எவ்விடத்திலே எக்காளச் சத்தத்தைக் கேட்கிறீர்களோ அவ்விடத்திலே வந்து, எங்களோடே கூடுங்கள்; நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார் என்றேன் என்று சொல்லும் தாசன் யார்?
2. தெசலோனிக்கேய சபையார் சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் எதையும், எதையும் காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக்குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மைபாராட்டுகிறோம் என்கிறார் பவுல்?
3. ஆமானுக்கு எத்தனை குமாரர்கள்?
4. தேவன் படைத்ததை ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளும்போது அது எதினாலும், எதினாலும் பரிசுத்த மாக்கப்படும்?
5. அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன் என்ற தேவ தாசன் யார்?
6. தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. என் நாவு உமது நீதியையும், நாள்முழுதும் உமது துதியையும் சொல்லிக்கொண்டிருக்கும் என்ற தாசன் யார்?
8. பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படி பவுல் யாரை கிரேத்தாதீவிலே விட்டுவந்தார்?
9. கர்த்தருக்குப் பயப்படுதல் எந்நாட்களைப் பெருகப்பண்ணும்?
10. எனக்கு ஊழியஞ்செய்யும்படி உமக்குப் பதிலாக அவனை என்னிடத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்றிருந்தேன் என பவுல் யாருக்கு எழுதுகிறார்?

## கிறிஸ்துவின் சபையார் வழங்கும் தமிழ் நிகழ்ச்சிகள்

**சத்தியவழி வானொலி நிகழ்ச்சிகள்** *செய்தியாளர்* -சகோ.பி.ஆர்.சாமி

இலங்கை ஆசிய சேவை 25 மற்றும் 41 மீட்டரில் ஞாயிறு முதல் வெள்ளி வரை தினமும் மாலை 5.30 மணி

*தொடர்பு முகவரி:* **சத்திய வழி**, தபால் பெட்டி எண்-8405, பெங்களுரு-84

போன்-080-25463507-09844070763 E-mail: prsdoug@hotmail.com

**திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்** *செய்தியாளர்* -சகோ.ராஜநாயகம்

**தமிழன்** TV யில் சனி காலை 7.15 மணி

**தமிழன்** TV யில் திங்கள் காலை 7.00 மணி

**இமயம்** TV யில் வியாழன் காலை 6.15 மணி

*தொடர்பு முகவரி:* **திருமறை தியானம்**, தபால் பெட்டி எண்-27, காங்கேயம்-638 701

போன்-04257 230030, 989427 30382 E-mail: rajarichal@yahoo.co.in

**கிருபையுள்ள வார்த்தை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்** *செய்தியாளர்* -சகோ.பிலேமோன் ராஜா

**இமயம்** TV யில் சனி காலை 7.45 மணி

**தமிழன்** TV யில் ஞாயிறு காலை 7.45 மணி

**தமிழன்** TV யில் ஞாயிறு காலை 10.00 மணி

*தொடர்பு முகவரி:* **கிருபையுள்ள வார்த்தை**, தபால் பெட்டி எண்-15, அரசரடி. மதுரை-625 010.

போன்-0452-2607026, 92442 14421 E-mail: pcpr@graciousword.org, Web:www.graciousword.org


THE WORD OF CHRIST FEBRUARY 2011

சிறுவர் பகுதி

# நாகமான்

## Naaman

**வேத பகுதி: 2இராஜாக்கள்5:1-14**



அன்பு பிள்ளைகளே நாம் வேதாகமத்தில் இன்று நாகமான் என்பவரைப்பற்றி பார்ப்போம். இவர் சீரியா நாட்டின் ஒரு சிறந்த படைத்தலைவன் 2இரா.5:1–ல் இவர் மகா பராக்கிரமசாலி என்று வேதம் கூறுகிறது. ஆனால் இவருக்கு ஒரு வேதனை இருந்தது என்ன தெரியுமா? குஷ்டரோகம். உடல் எல்லாம் புண். இந்த நாகமானுக்கு மனதில் எவ்வளவு வேதனை இருந்திருக்கும்.

இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறுபெண்ணை சிறை பிடித்து வந்தார்கள். இப்பெண் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்துகொண்டு வந்தாள். அந்த சிறுபெண் நாகமானின் மனைவியிடம் தன் நாட்டில் உள்ள எலிசா தீர்க்கதரிசி இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள். இதை தன் கணவனுக்கு தெரிவித்தாள். நாகமான் ராஜாவிடம் உத்தரவு பெற்று எலிசா தீர்க்கதரிசியை சந்திக்கப்புறப்பட்டான். எலிசாவை சந்தித்தான் அப்பொழுது, எலிசா அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான். அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப்போய்; அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். எங்கள் நாட்டில் ஆறு இல்லையா? என்றான். இவன் ஊழியக்காரர் அவனை நோக்கி; தகப்பனே அந்த தீர்க்கதரிசி கூறியபடி செய்யும் என்றான். அந்தப்படி செய்தபோது இவன் மாம்சம் சிறு பிள்ளையின் மாம்சம்போல் ஆனது.

அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து, அவனுக்கு முன்பாக நின்று; இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்; என்றான். பாருங்கள் பிள்ளைகளே, இந்த நாகமானுக்குத் தான் எவ்வளவு சந்தோஷம் இருந்திருக்கும். விசுவாசித்து மூழ்கியபோது சுத்தமானான். அதுபோல நீங்களும் கர்த்தரை முழு விசுவாசத்தோடு விசுவாசிக்க வேண்டும். ஆமென்.

**மனப்பாட வசனம்**

“உமது அடியேன் இனிக் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை” 2இராஜாக்கள் 5:17.



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 11 பிப்ரவரி - 2011 கனி - 3

# ஜாக்கிரதையாயிரு

## Be Diligent

ஆசிரியவுரை



நம்முடைய வாழ்க்கையில் பல வகையில் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கின்றோம். அதினால் அநேக நன்மைகளை பெற்றுக்கொள்கிறோம். நாம் ஜாக்கிரதையாயிராத வேளையில் அநேக நஷ்டத்தை அடைகிறோம். ஆகையால் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாகவே இருக்கப்பிரயாசப்படுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயு என்ற உத்தம ஊழியக்காரனுக்கு எழுதும்போது “நீ வெட்கப்படாத ஊழிக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு” என்று எழுதுகிறார் (2தீமோ.2:15). நாம் என்ன செய்கிறோம், எதைப்போதிக்கிறோம், எப்படி ஜீவிக்கிறோம் என்பதை வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் கண்ணோக்கிப்பார்க்கிறார். ஆகையால் நாம் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக நிற்க ஜாக்கிரதையுள்ளவர்களாக இருந்து செயல்படவேண்டும். ஊழியத்தில் பொதுவாக சோம்பல் ஏற்படும். நமக்கு எதிராளியாகிய பிசாசானவன் நம்முடைய வாழ்க்கையில் சோர்வைக்கொண்டுவருவான், வெட்கத்தைக்கொண்டுவருவான். எனவே பவுல் தீமோத்தேயுவுக்கு நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயிரு என்று புத்திமதி சொல்கிறார். ஆண்டவர் சிலுவையில் நம்முடைய பாவங்களை போக்கும்படியாக பாடுபட்டபோது அவர் வெட்கப்படவில்லை, நாம் ஏன் வெட்கப்படவேண்டும்? நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பது என்பது எத்தனை ஆசீர்வாதம் நிறைந்த வாழ்க்கை. இதை நினைத்து நாம் எப்பொழுதும் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாகவே இருக்கவேண்டும். பவுல் சொல்லுகிறார்; “நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்” என்கிறார்

(அப்.24:16). பொதுவாக மனுஷனுடைய பார்வையில் குற்றமற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய பார்வையில் துன்மார்க்கராயிருப்பார்கள். பவுல் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் என்ற வார்த்தையை சொல்லுகிறார். கொஞ்சநாட்கள் மட்டுமல்ல எப்பொழுதும் குற்றமற்ற மனசாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன் என்கிறார். இச்செய்தியைக் வாசித்துக்கொண்டிருக்கிற வாசகரே, நீங்கள் இவ்விதமான மனசாட்சியோடு ஜீவிக்கின்றீர்களா? நாம் இந்த உலகத்தில் குற்றவாளியாக ஜீவிப்பதால் அநேகரால் புறக்கணிக்கப்படுவோம், அல்லது அதற்குரிய தண்டனையை அனுபவிப்போம். நலமான காரியங்களைச் செய்து நற்பேர் பெற்று வாழும்போதோ, நம்முடைய மனசாட்சியே நம்மை முதலாவது பாராட்டும். உலக மக்களும் நம்மைக்குறித்து சாட்சிகொடுப்பார்கள். தேவனும் நம்முடைய காரியங்களைப் பார்த்து நலமான காரியங்களை நமக்குச் செய்வார். இதையெல்லாம் அறிந்தபடியினாலே பவுல் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன் என்கிறார்.

“விதவையையும் பரதேசியையும் கொன்று, திக்கற்ற பிள்ளைகளைக் கொலை செய்து; கர்த்தர் பாரார், யாக்கோபின் தேவன் கவனியார் என்று சொல்லுகிறார்கள்” என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்.94:5,7). இவர்களுக்கு வேதம் கொடுக்கும் பதில் என்னவென்றால் “ஜனத்தில் மிருககுணமுள்ளவர்களே, உணர்வடையுங்கள்; மூடரே, எப்பொழுது புத்திமான்களாவீர்கள்? என்கிறது. மனிதநேயம் இல்லாமல் நடந்துகொள்ளுகிற இவர்களைப் பார்த்து ஜனத்தில் மிருககுணமுள்ளவர்களே என்கிறது. ஏனென்றால் மிருகங்கள் தான் ஒன்றையொன்று அடித்து கொன்று தின்றுபோடுகிறது. இதைப்போல குணமுடையவர்களே உணர்வடையுங்கள் என்று வேதம் எச்சரிக்கிறது. மேலும் “காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ?” என கேள்வி எழுப்புகிறது (சங்.94:9). நாம் காண்கிற கண்களையும், காதுகளையும் கர்த்தர் உண்டுபண்ணினார். இதை நீங்கள் அறியவில்லையா? அன்பானவர்களே சற்று சிந்தியுங்கள். இவைகளை மனிதனுக்கு உண்டாக்கினவர், கண்ணோக்கிப்பார்க்கிறார். திக்கற்றவர்களுடைய வேண்டுதலைக் கேட்கிறார். விதவைகளின் கண்ணீரைக் காண்கிறார். அவர்களுக்கு இடையூறுசெய்கிறவன் தண்டனைக்குத்தப்பான். ஆகையால் இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிற நீ உன்னைக் குறித்து ஜாக்கிரரையாயிரு.

மேலும், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; “நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரரையாயிரு” என்கிறார் (1தீமோ.4:13). வேதம் வாசிப்பது நமக்கு அநேக நன்மைகளை கொண்டுவருகிறது. தாவீது சொல்லும்போது: “கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்” என்கிறார். ஆண்டவர் இயேசு சொல்லும்போது; “வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு



அவர் எப்போதுமே தமது பிதாவின் நோக்கத்தை நிறைவேற்றிடவும் நம்மை நமது குற்றத்தை, பாவத்தை மன்னித்து நம்மை பரலோகத்தில் சேர்த்திடவுமே அவர் விரும்பினார். அதனையே செய்துமுடித்தார். யோவா.17:4 பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன் என்றார். எனவே இயேசு தன்னை பிதா என்று அழைக்கவில்லை, நாமும் இயேசுவை **பிதா** என்று அழைப்பதையும் அவர் விரும்பவில்லை.

25. மத்.28:10, யோவா.20:17 இயேசு உயிர்த்தெழுந்த நாளில் அவரை பார்த்திடவேண்டும் என்ற பரவசத்தினால் அவர்கள் போகும்போது, ..இயேசு அவர்களை நோக்கி **பயப்படாதிருங்கள்,** நீங்கள் போய் **என் சகோதரர்** கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள். அவர்கள் அவரைக்குறித்து அவிசுவாசத்தினாலும் அவர் பிதா அல்ல என்பதையும் அறிவிக்கிறதே! மரியாள் இயேசுவை காண கல்லறைக்கு வந்திருந்தபோது உயிர்த்தெழுந்த ஜீவாதிபதியான இயேசு; "...என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை, நீ **என் சகோதரரிடத்திற்குப்** (சீடர்களிடம்) போய் நான் **என் பிதாவினிடத்திற்கும்** உங்கள் பிதாவினிடத்திற்கும், **என் தேவனிடத்திற்கும்** உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்" என்றதினால் தனக்கும் நம் எல்லோருக்கும் இயேசு சகோதரர் என்றும் அவர் **பிதா,** நம்மனைவரின் **பிதா**வென்றும், அவர் தேவன் நம்மனைவரின் தேவன் என்றும் கூறியதினால் மெய்யாகவே இயேசு நமது மூத்த சகோதரன் தான். பிதா அல்லவே அல்ல!

**வேத அறிவுப்போட்டி எண் 125-ல் வெற்றிபெற்றவர்கள்**

1. N. கமலவேணி -சென்னை
2. F. சர்லோ -புதுவை
3. M. ரவி ஜேக்கப் -புதுவை
4. A. ரெபேக்காள் -மதுரை
5. Mrs. மரகதம் திரவியம் -கோம்பை
6. R. சரோஜா -தெனகலம்
7. J. ஐசக் -திருநெல்வேலி
8. R. திலகவதி -ரெட்டியார்பாளையம்
9. Mrs. மெல்சிடா -திண்டுக்கல்
10. T. ரஞ்சிதா -கோம்பை

## இஸ்ரேல் தேசத்தில் நாசரேத்

இஸ்ரேல் நாடு மிகச்சிறிய நாடு. இந்நாட்டின் மொத்தநிலப்பரப்பு 14,000 சதுரமைல்கள். இங்கு உள்ள பட்டணம் நாசரேத். இயேசு கிறிஸ்துவினுடைய வளர்ப்புப் பெற்றோர்கள் யோசேப்பும், மரியாளும் இப்பட்டணத்தைச் சார்ந்தவர்கள். இயேசு கிறிஸ்து பெத்லகேமில் பிறந்தபோது அவர் இளமை பருவத்தில் நாசரேத் ஊரில் வளர்ந்தார். ஆகையால் அவர் ‘நசரேயன்’ என்று அழைக்கப் பட்டார். நாசரேத் பட்டணம் கடல் மட்டத்தில் இருந்து 1230 அடி உயரத்தில் இருக்கிறது.

***-M.Rajamani***

**ஜெபியுங்கள்**

*1. ஜனவரி மாதத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்த சகோ. ஆபிரகாம் மற்றும் யோசுவாவிற்றாக...*


*2. இவர்களை கர்த்தருக்குள் வழி நடத்தின சகோ. இராஜாமணி அவர்களுடைய ஊழியத்திற்காக...*

*3. மாணவர்களுடைய பட்ச்சைக்காகவும், அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்காகவும்...*

## சரித்திர ஆய்வு

# "நேசகுமாரன் இயேசு"

*அவர் அப்பா, பிதா அல்ல என்பதற்கு வேதாகம சான்றுகள்*



John S.Nathan Gospel Minister
9444443378

- சென்ற மாத தொடர்

அறிக.

22. விசுவாசிகள் தங்களின் தேவைகளெல்லாம் தேவனுக்கு (பிதாவுக்கு) தமது மூலமாய் ஜெபித்து வேண்டி பெற்றுக்கொள்ளலாம். யோவா.14:12-15; 15:16,16:23-27 என்றார். ...நான் (இயேசு) என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியயினால், நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான் (வசனம் 13) என் (இயேசுவின்) நாமத்தினாலே எதைக்கேட்கிறீர்களோ குமாரனில் **பிதா** மகிமைப்படும்படியாக, அதைச்செய்வேன். யோவா.15:16 நீங்கள் என் நாமத்தினாலே **பிதாவை** கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக... என்பதை நன்கு சிந்தித்திடவும். 16:27 நீங்கள் என்னைச் சிநேகித்து நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் **பிதா** தாமே உங்களைச் சிநேகிக்கிறார்.

23. இயேசுவுக்காக முதல் இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான் போன்ற பரிசுத்தவான்கள் கூட பிதாவையும் குமாரனையும் தனி ஆளாகவே கண்டனர். அப்.7:56 "...**மனுஷகுமாரன்** (இயேசு) **தேவனுடைய** (பிதாவின்) வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். தானியேல் 7:9-14... இதோ, மனஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார், அவர் நீண்ட ஆயுசுள்ளவர். ...அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும். என்பதை கி.மு 616-536 இடைப்பட்ட காலத்தில் தீர்க்கதரிசனமாக கூறப்பட்டதை அறியவும்.

24. வேதாகம குறிப்பின்படி இயேசு கூறிய முதல் வார்த்தை, கடைசி வார்த்தை என்ன? பஸ்கா பண்டிகை முடிந்த பின்பும் இயேசு, தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும் அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை **வினாவவும்** கண்ட (அவருடைய வளர்ப்பு தந்தை) யோசேப்பும், ஈன்றெடுத்த மரியாளும் ...என் மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய் என்று கேட்டபோது, நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் (பரலோக) **பிதாவுக்**கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா? (லூக்.2:49).அவர் நோக்கம், விருப்பம் தான் பிதாவுக்கு சேவைசெய்யவும், அவருக்கு தன் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார் (பிலி.2:8). அவர் (தன் மரணத்திற்குமுன்பு) பேசிய கடைசி வார்த்தை "...பிதாவே, உம்முடைய கைகளில் **என் ஆவியை** ஒப்புவிக்கிறேன்" லூக்.23:46. இவ்வாறாக



நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" என்கிறார். ஆகையால் வேதவாசிப்பு என்பது மிக அவசியம். அதைப்போல, புத்திசொல்லுகிறதிலும் நாம் சோர்ந்துபோகாமல் செயல்படவேண்டும். அவன் கெட்டுப்போனால் நமக்கென்ன என்று மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. அவனுடைய இரத்தபலி நம்மிடம் கேட்கப்படும். ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமறபோனால் அதுவே அவனுக்கு பாவமாயிருக்கும் என்ற வசனத்தை நினைத்துப்பாருங்கள். எனவே புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். உபதேசத்தை பொறுத்த மட்டில் நாம் என்னபோதிக்கிறோமோ அதை முதலாவது நாம் கைக்கொள்ளவேண்டும். ஊருக்குத்தான் உபதேசம் அது தனக்கல்ல என்று சொல்வதைப்போல நடந்துகொள்ளக்கூடாது. அதினாலே பவுல் "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்கிறார் (1கொரி.9:27). மற்றவர்களுக்குப் போதித்துவிடலாம் அது மிகவும் சுலபம். ஆனால் அதை நாம் கைக்கொள்கிறோமா? ஆகையால் என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்றார் பவுல். நம்முடைய சரீரத்தையே நாம் கட்டுப்படுத்த தவறிவிட்டால், மற்றவர்களுடைய தவறுகளை நாம் சுட்டிக்காட்ட தகுதியற்றவர்களாக போய்விடுகிறோம். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" என வேதம் மிகத்தெளிவாக போதிக்கிறது. நியாயாதிபதியாகிய கர்த்தர் ஒருநாளிலே வருவார். அவருடைய வருகையிலே குற்றமற்றவர்களாக, மாசில்லாதவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க நாடுங்கள்.

"ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" என்கிறார் பேதுரு (2பேது.3:14). அவருடைய சந்நிதியில் துன்மார்க்கன் சேரான். அவனை அவர் ஏற்றுக்கொள்ளார். எவர்கள் கறையற்றவர்களாயும், பிழையில்லாதவர்களாயும் அவருடைய சந்நிதியில் ஜாக்கிரதையாயிருக்கும்படி காத்திருக்கிறார்களோ அவர்களே கர்த்தரோடு என்றென்றும் நிலைத்திருப்பார்கள். "தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்" என்கிறார் சாலொமோன் ஞானி (நீதி.22:29). அதைப்போல, உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவைப்போல இயேசுவுக்கு ஊழியம் செய்கிறவன். ராஜாதி ராஜாவாகிய அவர் வரும் வேளையில் அவர் சமுகத்தில் நிற்பான். அவனை கர்த்தர் ரட்சிப்பார். இஸ்ரவேலை வழிநடத்திக்கொண்டு வந்த மோசேக்குப் பின்பு அவர்களை வழிநடத்தும்படியாக யோசுவாவை தேவன் தெரிந்துகொண்டார் என்பதை அறிவீர்கள். அவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்த ஆலோசனை என்னவென்றால்; "இப்பொழுதும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தாம் உங்கள் சகோதரருக்குச் சொல்லியிருந்தபடியே,

அவர்களை இளைப்பாறப்பண்ணினார்; ஆகையால் கர்த்தரின் தாசனாகிய மோசே யோர்தானுக்கு அப்புறத்திலே உங்களுக்குக் கொடுத்த உங்கள் காணியாட்சியான தேசத்திலிருக்கிற உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பிப் போங்கள். ஆனாலும் நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவருடைய வழிகளிலெல்லாம் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, அவரை உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் சேவிக்கிறதற்காக, கர்த்தரின் தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த கற்பனையின்படியேயும் நியாயப்பிரமாணத்தின்படியேயும் செய்யும்படிமாத்திரம் வெகு சாவதானமாயிருங்கள் என்றான்" (யோசு.22:4,5). அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்கூடாக பார்த்தவர்கள் இஸ்ரவேலர்கள். அவர்களுக்கு கர்த்தர் வாக்குத்தத்தம் செய்த கானான் தேசத்தைக் கொடுத்தார். அந்ததேசத்தில் அவர்கள் கர்த்தரை மறந்து அந்நிய தேவர்களை நாடி போய்விடக்கூடாது என்பதற்காக யோசுவா அவர்களை பார்த்து மோசேயின் கற்பனைகளையும், நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளின்படி செய்ய வெகு சாவதானமாயிருங்கள் என்கிறான். அப்படியானால் வெகு ஜாக்கிரதையாயிருங்கள் என்று அர்த்தம். ஒருவேளை ஜனங்கள் வழிவிலகிபோகக்கூடும் என்பதால் கர்த்தரில் அன்புகூர்ந்து முழு இருதயத்தோடும் கர்த்தரை சேவிக்கும்படியான ஆலோசனையைக் கொடுக்கிறான். இன்றைக்கும் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அதைப்போல நம்மை சார்ந்தவர்களையும் ஜாக்கிரதையாயிருக்கும்படி புத்திசொல்லவேண்டியதும் அவசியமாயிருக்கிறது. "ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேது.5:8). ஆகையால் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்து அவனுக்கு எதிர்த்துநில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

**ஜாக்கிரதையாயிருக்கும்போது வரும் ஆசீர்வாதம் என்ன?**

"ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கும், பதறுகிறவனுடைய நினைவுகள் தரித்திரத்துக்கும் ஏதுவாகும்" என்று நீதி.21:5-ல் வாசிக்கிறோம். ஒருமனிதன் தன்னுடைய வாழ்க்கையில் ஜாக்கிரதையாயிருக்கும்போது அநேக நன்மைகளைப் பெற்று அநுபவிக்கிறான். அப்படிப்பட்டவனுடைய வீட்டில் செல்வம் குடிகொள்ளும். அதேவேளையில் தன்னுடைய வாழ்க்கையில் பதறுகிறவன். அதாவது நிதானமாய் செயல்படாமல், தேவமனிதர்களுடைய ஆலோசனையைக் கேட்காமல், தன்சொல்லாலும், செயலாலும் பதறி தன் ஆஸ்தியை இழக்கிறான். இப்படிப்பட்டவர்களை நாம் அநுதினஜீவியத்தில் காண்கிறோம். அன்பானவர்களே, நாம் தியானித்தபடியாக மனுஷருக்கு முன்பாகவும், தேவனுக்கு முன்பாகவும் குற்றமற்ற மனசாட்சியுடையவர்களாக இருக்கும்போதும் ஆசீர்வதிக்கப்படுவோம். அதைப்போல வேதத்தை வாசிக்கிறபோதும் அதை மற்றவர்களுக்கு உபதேசிக்கிறபோதும் ஜாக்கிரதையாயிருப்போமானால் தேவனால்



பண்ணுகிறதுமாக எண்ணி நாம் பயப்படுகிறோம். ஆனால் இது நாம் இரட்சிப்படையும்படிக்கு இது இயேசு சுமந்த சிலுவையின் மூலம் நிறைவேறியது. இதைப்போலவே, நாம் எப்பேர்பட்ட துன்பத்தையும் தாங்கவேண்டும் அதன் விளைவும் நம்முடைய இரட்சிப்பாக இருக்கும், நம்முடைய நஷ்டமாக இராது!

✦ **நாம் ஏன் "அசுத்தமான" வற்றோடு பங்குகொள்ளக் கூடாது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால் நம்முடைய பிதாவும், இயேசுவும் பரிசுத்த மானவர்களாயிருக்கிறார்கள். மேலும் நாமும் பரிசுத்தமாயிருப்பதின் மூலம் குடும்ப சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாயிருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த பாவம் நிறைந்த உலகத்தின் "அசுத்தமான" வற்றிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளுவது நம்முடைய பாதுகாப்பாயிருக்கும், அது நம்முடைய தியாகமல்ல. தேவன் **தடுக்கிறது** நமக்கு நல்லதாயிருக்கிறது என்பதும் இல்லை. அவர் **எதிர்பார்க்கிறது** நமக்கு தீமைநிறைந்தாயிருக்கிறது என்பதும் இல்லை. நம்முடைய அன்பின் பிதா– நாம் முழுமனதோடே ஐக்கியங்கொண்டு அவருடைய பிள்ளைகளாக இருக்க விரும்பியதால், அவர் எல்லாவற்றிலும் நம்மோடிருக்கிறார்!

"என்னிடத்தில் வாருங்கள்" என்ற இயேசுவினுடைய அழைப்பு நம்முடைய சுய நன்மைக்கென்று மாறாத இனிய வாக்குத்தத்தினைக் கொண்டிருக்கிறது. அவர், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத்.11:28,29) என்கிறார்.

நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை மிகக்கடினமானது என தீர்மானித்திருப்பீர்களென்றால், **திரும்பிச் சென்று இந்த தெரிந்துகொள்ளுதலை மறு ஆய்வு செய்யுங்கள்.** கிறிஸ்துவுக்குள்ளான இனிமையும் இளைப்பாறுதலும் நிறைந்த வாழ்வின் நன்மையினை இழந்துவிடாதீர்கள். பாவம் நிறைந்த உணர்வுகளை வெறுப்பது என்பது மிகக்கடினம் என உங்களிடம் கூறுகின்ற சாத்தான் ஒரு பொய்யன்.

**வேத அறிவுப்போட்டி எண் 125-ன் விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. விடுகதைகளினால் | -1இரா.10:1 | 6. பவுல் | -பிலி.3:1 |
| 2. பவுல், தீத்து | -கலா.2:3 | 7. அசரியா | -2நாளா.31:10 |
| 3. யோசியா | -2இரா.22:11 | 8. அழிந்துபோகுமே | -கொலோ.2:21 |
| 4. அன்பிலே | -எபே.5:2 | 9. எஸ்றா | -எஸ்.9:15 |
| 5. மூன்று மாதம் | -1நாளா.13:14 | 10. பவுல் | -1தெச.2:13 |

நாம் ஒரு கிறிஸ்தவனாகயிருக்க எப்பேர்பட்ட நஷ்டத்தையும் தாங்கிக் கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும் – அது நம்முடைய சிலுவை. (4) கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கர்த்தர் நம்மை நடத்துகிற வண்ணமாக அவரை பின்பற்றுகின்ற ஒரு செயலாகும்.

மேலும், ஆம், நாம் உலகத்தின் எண்ணங்களுக்கும் வழிகளுக்கும் பழக்கப்பட்டவர்களாயிருக்கும்போது தேவனுடைய மாதிரியின் மூலம் வாழ்வதற்கு கற்றுக்கொள்வது என்பது எளிதானதல்ல. நாம் 2பேது.1:4ல் பேதுரு கூறுவது போல் திவ்வியசுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு – நம்முடைய பழைய மனுஷ சுபாவத்திற்குப் பதிலாக புதியதான நம்முடைய பிதாவின் சுபாவத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஆனால் இந்த புதிய ஜீவியத்திற்குத் தேவையான ‘கடினமாக’ தோற்றமளிக்கின்ற இவற்றில் இனிமையும் அருமையுமான நோக்கமிருக்கிறது:

✦ **நாம் ஏன் வெறுப்பதற்குப் பதிலாக அன்பு கூர அறிவுறுத்தப் பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால் வெறுப்பு என்பது காயங்கட்டுவதற்குப் பதிலாக சத்துருக்களை உருவாக்கும் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகும்; வெறுப்பு தன்னைக் கொண்டிருக்கிற மனித சரீரத்தையே உருக்கி, முடிவிலே தன்னிலே கேடு விளைவிக்கும்!

✦ **நாம் ஏன் மற்றவர் ஒரு மைல் தூரம் வர பலவந்தம் பண்ணினால் “இரண்டு மைல் தூரம் போக” அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால் நாம் இருதயத்தில் மிகுந்த கோபத்துடனே (நம்முடைய சுய சரீரத்திற்குள் திராவகம் ஊற்றப்பட்டதுபோல) “முதல் ஒரு மைல் தூரம்” செல்லுவோம், ஆனால் நாம் விருப்பத்துடனே இரண்டாவது மைல் தூரம் செல்ல முயற்சிப்போமானால், நம்முடைய இச்செயல் நம்முடைய கோபத்தை ஆற்றும் மேலும் இவ்வாறாக நம்முடைய ஆவிக்குரிய, உணர்ச்சிபூர்வமான, சரீரப்பூர்வமான ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும்!

✦ **நாம் ஏன் நம்மை நாமே வெறுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால் இயேசுவும் கூட, “..... என்னிமித்தமாக வீட்டையாவது. சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும் இம்மையிலே நூறத்தனையாகவும் மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான்” என வாக்களித்துள்ளார். ஆனால் நாம் தாமே இச்சைகளையும் உலகத்தின் தீமைகளையும் வெறுக்காதிருக்கும் வரையில் அவர் தம்முடைய விருப்பத்தையும் வாக்களித்திருக்கிறதையும் நமக்காக அவர் செய்யமுடியாது.

✦ **நாம் ஏன் வழியில் துன்பமிருக்கும்போதும் கூட இயேசுவைப் பின்பற்றும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?**

ஏனென்றால், இவ்வுலகில் நாம் ஜீவிப்பதற்கான சரியான மாதிரியை அவர் நமக்குக் காண்பித்திருக்கிறார், மேலும் நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோமானால் இம்மையிலும் மறுமையிலும் சகலமும் நமக்கு நன்மையாகயிருக்கும். துன்பமா? முழுவதும் அச்சமூட்டுகிறதும் தியாகம்



ஆசீர்வதிக்கப்படுவோம். தொடந்து கறையில்லாதவர்களாக அவருடைய சந்தியில் காணப்படும்படி ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். அப்பொழுது நிலையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்.

**தெரிந்து கொள்ளுங்கள்**
**இந்தியாவில்**

- ☐ 28 மாநிலங்கள்
- ☐ 7 யூனியன் பிரதேசங்கள்
- ☐ 1652க்கும் மேற்பட்ட மொழிகள்
- ☐ 6400க்கும் மேற்பட்ட சாதிகள்
- ☐ 6 க்கும் மேற்பட்ட மதங்கள்



**பாலிதீன் பைகள்**
**மண்ணுக்கு எதிரி**

## பொது அறிவு சோதனை

**1. இந்திய ராணுவத்தை நிர்வகித்து இயக்குபவர் யார்?**

**அ) ஜனாதிபதி இ) பிரதமருடன் மத்திய அமைச்சர்கள் இ) பாதுகாப்புத்துறை அமைச்சகம்**

**2. நமது நாட்டில் விமானப்படை எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?**

**அ) 1930 ஆ) 1934 இ) 1932**

**3. கப்பல் படை அகடாமி அமைந்துள்ள நகரம் எது?**

**அ) சென்னை ஆ) மும்பை இ) கொச்சி**

**4. இந்திய ராணுவத்தில் பெண்கள் அணி இடம்பெற்ற ஆண்டு எது?**

**அ) 1943 ஆ) 1955 இ) 1993**

**5. நாட்டின் பாதுகாப்புக்காக கி.மு.414-ல் பாதுகாப்புக் குழு அமைத்தவர்கள் யார்?**


**அ)மராட்டியர்கள் ஆ)தெலுங்கர்கள் இ)தமிழர்கள்**

**விடைகள்: பாதுகாப்புத்துறை அமைச்சகம் 2. 1932 3. கொச்சி 4. 1993 5. தமிழர்கள்**

# கர்த்தருடைய இராப்போஜனத்தின் துவக்கம்

## The institution of the Lord`s Supper

*J.C.Choate*



கர்த்தருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்பே, கர்த்தர் தம்முடைய நினைவு கூருதலாகிய இராப்போஜனத்தை துவக்கினார். கர்த்தருடைய ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த போது சங்காரகாரன் அவர்களை சங்கரிக்காமல் கடந்துபோன நாளை நினைவு கூரும்படி வருடத்திற்கு ஒரு முறை பஸ்கா பண்டிகையை அநுஷ்டித்து வந்த பஸ்காபண்டிகைக்கு இயேசுவும் அவருடைய சீஷர்களும் எருசலேமுக்குப் பயணம் செய்தனர். இயேசு உலகமெங்குமுள்ள தம்முடைய ஜனங்களால் தம்முடைய சரீரம் மற்றும் தம்முடைய இரத்தபலியின் நினைவாக வாரந்தோறும் நினைவு போஜனமாக மாறப்போகிற தம்முடைய இராப்போஜனப் பந்தியை ஆரம்பிக்க இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டார். ‘‘அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு ,சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப்பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்’’(மத்.26:26-29).

அந்த சமயத்தில் கர்த்தர் இன்னும் சிலுவையில் மரிக்கவில்லை என்பதை தயவுசெய்து கவனியுங்கள், ஆனால் அவர் தம்முடைய மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு தம்மை நினைவு கூருவதை அநுஷ்டிக்கும்படிக்கு இதை ஆரம்பித்தார். அத்தோடு கூட அவர் தாம் அவர்களோடேகூட தம்முடைய பிதாவின் ராஜ்யத்திலே பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்றும் குறிப்பிட்டார். அந்த ராஜ்யம் அல்லது சபை இன்னும் வராதிருந்தது, ஆனால் அது அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வருவதாக இருந்தது. அப்போஸ்தலர் 2ல் குறிப்பிட்டுள்ளபடி பெந்தெகொஸ்தே நாளில் சபை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து, சீஷர்கள் அவருடைய இராப்போஜனத்தில் பங்குகொண்டு அந்த நாளை தொடர்ந்து அநுஷ்டித்து வருகிறபோது அவர் தம்முடைய ஜனங்களோடு இருப்பார்.



பெண்கள் பகுதி

# கிறிஸ்தவராயிருப்பது மிகக் கடினம்

## Being A Christian Is Too Hard

*- Betty*

இயேசு, உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஒருவன் உங்களை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் திருப்பிக் கொடுங்கள், மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள், இதுபோன்ற பல கட்டளைகளைக் கொடுத்தார். அவர் தம்முடைய சீஷர்களை சற்குணராகயிருக்கவும், மற்றவர்கள் ஒரு மைல் தூரம் வர பலவந்தம் பண்ணினால், இரண்டுமைல் தூரம் போக விருப்பமாயிருக்கவும் கேட்டுக் கொண்டார்(மத்.5,6,மற்றும்7–ம் அதிகாரங்களை பல அடிப்படை சத்தியங்களுக்காக பாருங்கள்)



சிலநேரங்களில் ஜனங்கள் கிறிஸ்தவத்தின் மிக உயர்ந்த நன்னெறிகளையும், சமூக நிலைகளையும் வாசிக்கும் போது,அவர்கள், ‘‘இது மிகக்கடினம்’’ நான் இப்படிப்பட்ட நல்லவனாக இருக்கமுடியாது; உண்மையில், மேலும் நான் இப்படிப்பட்ட நற்குணசாலியாகயிருக்க முயற்சிக்கவில்லை, ஏனென்றால் நான் உலகத்திலுள்ள இனிமையான, சந்தோஷமான ஒவ்வொன்றையும் விட்டுவிட வேண்டியிருக்கும் என முடிவு செய்கின்றனர்.

எனவே **கிறிஸ்தவத்தை புறக்கணிக்க தீர்மானம் செய்யப்படுகிறது ஏனென்றால் இதன் வாழ்க்கைதரம் உண்மைக்கு மேலாக உயர்ந்தது எனக்கருத வசப்படுத்தப்படுகின்றனர்.**

இயேசு இவ்வாறு அழைக்கிறார் என்பது உண்மை: ‘‘ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் **தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு,** என்னைப் பின்பற்றக் கடவன்’’(லூக்.9:23). தேவனால் மேலும் நாம் அறிவுறுத்தப்படுகிறோம், ‘‘...நீங்கள் அவர்கள் **நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்** என்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமா யிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள **கர்த்தர்** சொல்லுகிறார்’’(2கொரி.16:17,18)

குறிப்பிடப்பட்டுள்ள பல வசனங்களில் இவ்வசனங்கள் தேவனைப் பற்றிய பல மிகமுக்கியமான காரியங்களைக் நமக்கு கூறுகிறது. (1) நாம் அவருடைய நிலைக்கு வரவேண்டும்; நமக்காக அவர் தம்மை குறைத்து கொள்ளுகிறதில்லை. (2) கிறிஸ்தவத்தின் அடிப்படை சுய–வெறுப்பு ஆகும். (3)

வளர்ச்சிக்கென்று கொடுத்து சபையை அலங்கரியுங்கள். மனப்பூர்வமாகக் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

**தாய்க்குரிய கடமைகள்** (Motherly Duties): அன்னாளும் கூட ஒரு ஞானமுள்ள ஸ்திரீதான். தன்னுடைய முதற்கனியைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தவள். கஷ்டப்பட்டு உழைத்து, பிரயாசப்பட்டு அதன் பலனைக் கர்த்தருக்குக் காணிக்கையாக கொடுத்துவிடலாம். எங்கள் பிள்ளைகளை எப்படி கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கமுடியும் என்கிறீர்களா? இந்த அன்னாள் மிகவும் துன்பப்பட்டு, துக்கமடைந்து, கர்த்தருடைய சமூகத்தில் அழுது மன்றாடி சாமுவேல் என்ற ஒரு மகனை அநேக வருஷங்களுக்குப்பின் பிள்ளையாக பெற்றெடுத்தாள். ஆனால் அவள் தன் முதற்கனியை கர்த்தருக்கென்றே ஒப்புக்கொடுத்து விட்டாள் என (1சாமு.1:27,28) வாசிக்கின்றோம். எல்லா ஆத்துமாக்களும் கர்த்தருடையது. கர்த்தரிடத்திலிருந்தே உங்களுக்குக் கிடைத்துள்ளது. அவர்களில் எந்த பிள்ளை மந்தமாகவும், படிப்பறிவில் குறைந்தவனாகவும் அல்லது இவன் எதற்கும் லாயக்கானவன் அல்ல, இவனை ஊழியத்திற்கு அனுப்பிவிடுவோம் என்று எண்ணுகிறீர்களா? அன்னாள், இவ்விதமான இழிவான எண்ணம் கொண்டவளல்ல, அநேக இக்கட்டு, ஏச்சு பேச்சு, மனக்கசப்பு, போன்றவற்றின் மத்தியில் ஒரே ஒரு மகனைப் பெற்றாள். அவளுக்கு அதுவே முதல் பிள்ளை. அவனை முதலாவதாக தேவனுக்குக் கொடுத்தாள். அது மாத்திரமல்ல, ஒரு தாயுக்குரிய கடமையைச் செய்துவந்தாள். “சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடைசெய்தான். அவனுடைய தாய் வருஷந்தோறும் செலுத்தும் பலியைச் செலுத்துகிறதற்காக, தன் புருஷனோடே கூட வருகிறபோதெல்லாம், அவனுக்கு ஒரு சின்னச் சட்டையைத் தைத்துக் கொண்டு வருவாள் (1சாமு.2:18,19).

பாருங்கள் ஒரு தாய் தன் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையை மட்டுமே செய்தாள். கர்த்தருக்கு முன்பாக அவன் பணிவிடை செய்ததில் இவள் குறுக்கிடவே இல்லை. ஆனால் இன்றோ சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தருக்குப் பயப்படுதலைக் கற்றுக்கொடுப்பதே இல்லை. தாங்கள் தான் கற்றுக்கொடுக்கவில்லையென்றால், சபையில் நடைபெறும் சிறுவர் வகுப்பிற்கு அனுப்பியாவது கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கலாமே! இவ்விஷயத்தில் அக்கரை கொள்ளாத ஸ்திரீ நிச்சயமாகவே ஒரு ஞான இருதயமுள்ள ஸ்திரீயாக இருக்க முடியாது, கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.

## மருத்துவ குறிப்பு

**கர்த்தர் உண்டாக்கின புதினாவின் மகிமை**

*புதினா நல்ல பசியை உண்டாக்கும். சிறுநீரைப் பெருக்கி உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும். அஜீரணம், வாய் துர்நாற்றம், வயிறு உப்புசம் ஆகியவற்றைக் குணப்படுத்தும். இரைப்பைக்கு வலுவூட்டி குமட்டல், வாந்தியை நிறுத்தும். புதினா கீரையை உலர்த்தி பொடிசெய்து தேனில் குழைத்து உண்டால் பெண்களுக்கு உண்டாகும் மாதவிடாய் பிரச்சனை தீரும். நரம்புத் தளர்ச்சிக்கு புதினா சிறந்த மருந்து. வாரம் 1 நாள் துவையல் வைத்து, சாப்பிடலாம்.*

*உண்டு பலன் பெருக,*

*அன்புடன் வாழ்த்தும் உங்கள் சாலொமோன். வதிலை*



ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு, “ஜீவ அப்பம் நானே . உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது யூதர்கள்:இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும்,என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந் திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்” (யோவா.6:48-58).

தொடர்ந்து கூறும் கூற்று முழுவதிலும் இயேசு தம்முடைய வெளிப்படையான சரீரத்தைப்புசிப்பது குறித்தும் தம்முடைய வெளிப்படையான இரத்தத்தை பானம்பண்ணுவது குறித்தும் பேசிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர் ஆவிக்குரிய காரியங்களை, அதாவது தம்முடைய சரீரத்திற்கு நினைவாக பிட்கப்படுகிற அப்பத்தைக் குறித்தும் தம்முடைய இரத்தினாலாகிய பாத்திரத்தைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தார். சிலர் இன்று அப்பத்தில் பங்கு கொள்ளும் போது, அது இயேசுவினுடைய வெளிப்படையான மாம்சமாக மாறுகிறது என்றும், பாத்திரத்தில் அல்லது திராட்சரசத்தில் பங்கு கொள்ளும் போது அது இயேசுவின் உண்மையான இரத்தமாக மாறுகிறது என்றும் விசுவாசிக்கின்றனர். நிச்சயமாகவே இது உண்மையல்ல. இயேசு தம்முடைய ஜனங்கள் மாம்சத்தைத் தின்னும் பழக்கத்தில் ஈடுபடும்படி தம்முடைய இராப்போஜனத்தைப் பயன்படுத்தமாட்டார்.

இப்போது கிறிஸ்து சிலுவையில் மரித்தவராக, அடக்கம் செய்யப்பட்டவராக மேலும் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவராக இருக்கிறார் மற்றும் இராஜ்யம் அல்லது சபையானது அவர் திட்டமிட்டபடி ஸ்தாபிக்கப்பட்டதுமாயிருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களாகிய, அவருடைய குடும்பமாகிய, சபை அங்கத்தினராகிய, நாம் அவருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படிக்கு வாரத்தின் முதல் நாள்

தோறும் கூடிவருகிறவர்களாகயிருக்கிறோம். பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் துரோவா பட்டணத்திலே அப்பம் பிட்கும்படி கூடிவந்திருந்த நிகழ்ச்சியை நாம் மாதிரியாகக் கொண்டிருக்கிறோம். வேதம், ‘‘வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்’’(அப்.20:7) எனக் கூறுகிறது. வேதாகம பண்டிதர்கள் ‘‘அப்பம் பிட்குதல்’’ என்ற வார்த்தைகளை, வாரந்தோறும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி சபை அநுஷ்டிக்கிறவற்றோடு ஒப்பிட்டு அங்கிகரித்துக் கொள்கின்றனர். கிறிஸ்து இராப்போஜனத்தைத் துவக்கினபோது, தம்மை நினைவுகூரும்படி தம்முடைய சீஷர்கள் இனி வரக்கூடிய நாட்களில் கூடிவரும்போது அவர்கள் மத்தியில் அவர் இருப்பார் என்று அவர் கூறியதையும் நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்கள். இன்னொரு சமயத்தில் இரண்டு அல்லது மூன்று பேராவது தம்முடைய நாமத்தில் எங்கே கூடுகிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் அவர் இருப்பார் எனச் சொன்னார்(மத்.18:20).

பவுல் கிறிஸ்தவர்கள் கூடிவந்திருந்த இடத்தில் வாரத்தின் முதல்நாளில் கலந்து கொண்டார் என்பதையும் தயவுசெய்து கவனியுங்கள். வாரத்தின் எந்த முதல் நாள்? ஒவ்வொருவாரத்தின் முதல் நாளில் கூடினார்கள்,மேலும் உடனுக்குடன் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும்படியாகவும் கிறிஸ்துவின் இராப்போஜனபந்தியை நினைவு கூரும்படியாகவும் கூடிவந்தார்கள். பழைய ஏற்பாட்டின் கீழ் தேவனுடைய ஜனங்கள் ஏழாம்நாளை நினைவுகூரும்படி கட்டளை பெற்றிருந்தனர், ஆனால் எந்த ஏழாம் நாள்? ஒவ்வொரு ஏழாம் நாள். அந்தப்படியே கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் பங்குகொள்ளவும் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பவுல் 1கொ. 1-ம் அதிகாரத்தில் சபை அங்கத்தினர்களில் சிலர் எவ்வாறு கர்த்தருடைய இராப்போஜனத்தை அசட்டை பண்ணினார்கள் என்பது குறித்து பேசுகிறார். அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை சாதாரணமான தங்களுடைய சொந்த போஜனத்திற்கு மாற்றினார்கள். இது தவறானது. பவுல் அவர்களுக்கு அவர்களுடைய சொந்த போஜனத்தைப் புசிக்க அவர்கள் சொந்த வீடுகளைக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் ஆராதிக்கக்கூடி வரும்போது கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தின் நினைவுகூருதலாக அப்பம் பிட்கும்படிக்கும் பாத்திரத்தில் பானம் பண்ணும்படிக்கும் கூடிவரவேண்டும், தங்களுடைய வயிறுகளை நிரப்ப சொந்த போஜனத்தைப் புசிக்க அல்ல என்று சொன்னார்.

மேலும், பவுல் ‘‘நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே



தங்களுடைய கைகளின் பிரயாசத்தினால் ஆசாரிப்பு கூடாரத்தை அலங்கரித்திருக்கிறார்கள். ‘‘ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும் தங்கள் கைகளினால் நூற்று, தாங்கள் நூற்ற இளநீலநூலையும் இரத்தாம்பர நூலையும் சிவப்பு நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் கொண்டு வந்தார்கள். எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ, அவர்கள் எல்லாரும் வெள்ளாட்டு மயிரைத்திரித்தார்கள் ...தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ...யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவந்தார்கள்’’ (யாத்.35:25-29). இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைத் தொழுது கொள்ளும்படி வனாந்தரத்திலே ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்கு எடுத்துச்செல்லக்கூடிய ஆசரிப்புக் கூடாரத்தைக் கொண்டிருந்தனர். தேவனை ஆராதிக்கும் இந்தக் கூடாரத்தைத் தான் அந்த ஸ்திரீகள் அலங்கரித்தார்கள்.

யாத்திராகமம்35:23,26-ம் வசனத்திலே தங்களின் கைகளில் நூற்று அதன்பின் தாங்கள் நூற்ற நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள் என்றும் மேலும் எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ அவர்கள் வெள்ளாட்டு மயிரைத் திரித்து காணிக்கையாக கொண்டுவந்தார்களெனவும் வாசிக்கிறோம். ஆக, கர்த்தருக்குக் காணிக்கையை செலுத்துவதில் அதிகமாக பிரயாசமெடுத்து கடினமாக உழைத்து கர்த்தருக்கென்று செலுத்தியுள்ளனர். இன்றைய எந்திர உலகில் இயந்திரங்களே நூல் நூற்று விடுகிறது. ஆனால் அவர்களோ தங்கள் கைகளினால் நூற்றிருக்கிறார்கள். நிச்சயமாக மிகவும் கஷ்டப்பட்டு நூல் நூற்றிருப்பார்கள். கஷ்டப்பட்டுதான் வெள்ளாட்டு மயிரையும் திரித்திருப்பார்கள். இவ்வாறாக தங்களுடைய உற்சாகத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அதுவும் மனப்பூர்வமாய் செய்துள்ளனர் என வாசிக்கிறோம்.


இன்று கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளுகிற அன்பு சகோதரியே, சற்றே உங்கள் இருதயம் ஞானமுள்ளதாகவும் ஞான எழுப்புதல் அடைந்துள்ளதாகவும் இருக்கிறதா என சோதித்துப்பாருங்கள். வெறுமனே மனக்கிளர்ச்சிக்கும் சரீர உற்சாகத்திற்கும் இடமளித்து வருகிறீர்களா? அன்றைய நாட்களில் ஆசரிப்பு கூடாரத்தை அலங்கரித்த ஸ்திரீகளைப்போல இன்றைய நாளில் கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றும்படி உங்கள் கைகளின் பிரயாசத்தை செலவு செய்கிறீர்களா? அல்லது யூதர் அடையாளத்தைத் தேடினது போல நீங்களும் இன்னும் கர்த்தரிடத்தில் வேலைகிடைத்துவிட்டால் அல்லது என் பிள்ளைகளுக்கு வேலைகிடைத்துவிட்டால் அல்லது திருமணம் நடந்துவிட்டால் அல்லது என் நோய்தீர்ந்துவிட்டால் அல்லது என் கடன் பிரச்சனை தீர்ந்துவிட்டால் அல்லது எனக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்துவிட்டால் கர்த்தரை விடாது பின்பற்றுவேன் என்று அடையாளங்களையே தேடிக்கொண்டிருக்கிறீர்களா? அன்பு சகோதரியே, கர்த்தர் சர்வ வல்லவர், ஐசுவரியசம்பன்னனர் என்று விசுவாசிக்காத மட்டும் நிச்சயமாக நீங்கள் எதையுமே பெற்றுக் கொள்ள முடியாது. அப்படியே ஏதேனும் பெற்றுக்கொண்டாலும் அவைகள் அநித்தியமானவைகள். அழிந்துபோகக் கூடியவைகள் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மறுமையில் நித்திய வாழ்வையும் கொடுக்கமாட்டாதவைகள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறேன். உங்கள் வாழ்வில் இதையே முன்வைப்பீர்களென்றால் நிச்சயமாகவே நீங்கள் ஞான இருதயமுள்ள ஸ்திரீகளாக இருக்க முடியாது. கர்த்தரிடத்திலிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். கர்த்தருடைய சபை

பெண்கள் பகுதி

# ஞான இருதயமுள்ள ஸ்திரீகள்

## The Women That Were Wise Hearted

***-Glory Arjunan***



இன்றைய நாட்களில் ஞானமே பிரதானமென ஞானத்தைத்தேடி உலகம் சென்று கொண்டிருக்கிறது. ஞானத்தினால் மனிதன் பலவற்றைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கிறான். John Lehmann என்ற கவிஞர் இவ்வாறாக தன் கவிதையில் எழுதியுள்ளார்.

"This excellent machine will illustrate

The modern world divided into nations;

So neatly planned, that if you merely tap it

The armaments will start their devastations"

அதாவது "இந்த அற்புத எந்திரம் காட்டுவதெல்லாம்

இன்றைய நவீன உலகின் பிரிந்துபட்ட தேசங்களையே,

அத்துணை அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன; சற்றே தட்டினால் போதும்

அழிவுக் கருவிகள் ஆகாயத்தில் சீறிப்பாய்ந்து அழித்துவிடும்".

ஆம், உலக ஞானம் அழிவை நோக்கிச் செல்கின்றது. வேதவாக்கியத்தில் "யூதர்கள் அடையாளத்தைத் தேடுகிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1கொரி.1:22,23) என பவுல் கூறுகிறார். மேலும் இந்த பவுல் தன்னைக் குறித்து கூறுகையில் "...கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்" (1கொரி.1:17) என்றார். அதாவது தான் பேச்சாற்றலில் சிறந்தவனல்ல என்கிறார். ஏனெனில் உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது ஆனால் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன் தம்முடைய ஜனங்கள் தம்முடைய ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவிரும்புகிறார். "... நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக" (யாத்.28:3) என்றார்

உங்களில் ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்வார்களாக (யாத்.35:10) என்று மோசே சபையாரை நோக்கி கூறினான். இவ்வாறாக தேவ ஞானத்தைப் பெற்றவர்கள் என்ன செய்தார்கள்?

**கூடாரத்தை அலங்கரித்தார்கள்** (Beautifying the Tabernacle):



பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன் படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" (1கொரி.11:23-29) என தொடர்ந்து கூறினார்.

கொரிந்து சபை கிறிஸ்தவர்கள் இவ்வாறாக நினைவுறுத்தப் பட்டார்கள்,நாமும் அவ்விதமாக, கர்த்தருடைய இராப்போஜனப் பந்தியில் பங்கெடுக்கும் போது நம்மை நாமே சோதித்தறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமில்லாதவனாக இருந்தால், அவன் தேவனிடத்தில் மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பைப் பெற வேண்டியது அவசியம். பாவம் வெளிப்படையாக இருக்குமானால் அவன் சபையாருக்கு முன்பாக, மனந்திரும்புதலை வெளிப்படுத்தும்படிக்கும், தன்னுடைய குற்றங்களை அறிக்கையிடும்படிக்கும், தன்னுடைய சகோதரரிடம் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வதற்கும் செல்ல வேண்டியது அவசியம். விசுவாசமுள்ளவராக, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பியவராக, மன்னிப்புக்கேட்டவராக இருக்கிறவர்கள் இராபோஜனத்தில் பங்குகொள்ள பாத்திரவான்களாக இருக்கிறார்கள். ஒருவன் தன்னை சோதித்தறிந்து, தன்னை சரிசெய்து கொள்ளாமல் இருந்தால், அவன் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமைக் குறைச்சலை கொண்டு வருகிறவனாகவும் தன்னை தண்டனைக்கு உட்படுத்துகிறவனாகவுமிருக்கிறான்.

நீங்கள். கிறிஸ்தவர்களா, கிறிஸ்துவின் சபை அங்கத்தினரா? அப்படியிருப்பீர்களென்றால், பின்பு ஆராதிக்கும்படிக்கு வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய ஜனங்களோடு, அவர் உனக்காகவும் உன்னுடைய இரட்சிப்பிற்காகவும் அவரையும் அவர் செய்து முடித்தவற்றையும் நினைவுகூரும் நோக்கத்திற்காக அசட்டைசெய்யாதபடி மிகுந்த பயத்தோடு கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி கூடி வரவேண்டும். இந்த வழிபாடு கர்த்தருக்கு கனத்தையும் மகிமையையும் கொண்டுவருகிறது. மேலும் அவரிடத்தில் கொண்ட விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படிக்கு உங்களுக்கு பலத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது.

**"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" - யோவான் 14:15**

**நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே பின்பற்றி அவரையே சேவிப்போம்**

As For Me and My House, We Will Follow and Serve the Lord

*-Peter Mostert*

நித்தியமாக இழந்த நிலையில் இருக்கின்ற பயத்தினால் நான் ஒரு கிறிஸ்தவனாக மாறும்படிக்கு எனக்கு வலிமைமிக்க மன ஆயத்தம் கொடுக்கப்படலாம். நான் கிறிஸ்தவ சூழலில் வளர்க்கப்பட்டிருந்த போதிலும் அதாவது சிறுவயதிலிருந்தே என்னுடைய பெற்றோர் என்னை கிறிஸ்தவனாக வளர்த்திருந்த போதிலும், என்னுடைய தாயார் கர்த்தருடைய ஜெபத்தை எனக்கு போதித்தபோதிலும், நான் பல்வேறு சபைகளில் கலந்து கொண்டபோதிலும்- நான் முழுமையற்றவனாக உணர்ந்தேன்.

நான் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது நான் பத்தொன்பது வயதுடையவனாகயிருந்தேன் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வந்து நியூசிலாந்தில் ஊழியப்பணிசெய்து கொண்டிருந்த சபை அங்கத்தினர்கள் என்னுடைய சகோதரனையும், இரண்டு வருடங்களுக்குப்பிறகு என் தந்தையையும், தாயையும் என்னையும் அப்போஸ்தலர் 2:38-ன்படி சத்தியத்திற்குக் கீழ்ப்படியபண்ணினார்கள் - அதாவது மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்படி செய்தார்கள்.

இயேசுவில் விசுவாசம் கொள்வதில் எனக்கு ஒரு போதும் பிரச்சனை இருந்ததில்லை - எப்போதும் என்னுடைய ஆதி விசுவாசத்தின்படி இது நடைபெற்றது!

ஞானஸ்நானத்தில் கீழ்ப்படிவதில் எனக்குப் பிரச்சனை இல்லை - ஒருசமயம் நான் சத்தியத்தை விசுவாசித்தேன், நான் மனப்பூர்வமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன்.

மனந்திரும்புதல் என்பது எனக்கு உண்மையிலே ஜீவியம் - மாற்றம் நிகழ்ச்சியாக இருந்தது. நான் என்னுடைய "உலகப்பிரகாரமான" நண்பர்களை விட்டு விலகி, ஒவ்வொரு ஆராதனைக்கும் சபையோடு சேர்ந்துகொண்டேன், மேலும் என்னுடைய வாரத்தின் இறுதி நாட்களை வீடுவீடாக சுவிசேஷத்தைப் போதிப்பதில் செலவழித்தேன். நான் கிறிஸ்துவுக்கு, என்னுடைய பிள்ளைகளை கஷ்டப்பட்டு முயற்சி செய்து கிறிஸ்தவர்களாக வளர்த்து அவர்களை ஒரு கிறிஸ்தவப்பல்கலைகழகத்திற்கு அனுப்பி, அவர்கள் கிறிஸ்தவர்களை திருமணம் செய்யும்படி உற்சாகப்படுத்தி, ஊழியக் களத்தில் நுழைந்து கிறிஸ்துவின் சபையில் வழிநடத்துனர்களாக மாறவும் அர்ப்பணித்து நிலைத்திருந்தேன்.

என்னுடைய ஒட்டு மொத்த கிறிஸ்தவ அனுபவம் முழுவதிலும், எப்படியோ, நான் தொடர்ந்து மல்லுக்கட்டுவதே மிச்சமாயிருந்தது மேலும் புரிந்து கொள்வதிலும் விசுவாசிப்பதிலும் கடினமான சூழ்நிலையைப் பெற்றிருந்தேன். இவ்வுலகில் தேவன் அதிகமாக வேதனையையும், துன்பத்தையும் அனுமதிக்கிறார் என்பதையும் அவருக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு தேவன் நரகத்தை அனுமதிக்கிறார் என்பதையும் நம்புவதற்குக் எனக்குக் கடினமாக இருந்தது; என்னைப் போன்ற பலவீனரை தேவன் தம்முடைய சுவிசேஷத்தைப்



பிரசங்கிக்கும்படி பயன்படுத்துகிறார் என நம்புவதற்கும் கஷ்டமாகயிருந்தது; ஞானஸ்நானம் பெற்றவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்களென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; என்னுடைய பாவங்களுக்காக இயேசு மரிக்க வேண்டியிருந்தது என நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; என்னுடைய தாலந்துகளை நான் பயன்படுத்தாவிட்டால் தேவன் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டாரென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது; சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்காத எண்ணிலடங்கா மில்லியன் ஜனங்கள் அழிந்து, அப்படியே போய்விடுவார்களென நம்புவதற்கும் கடினமாகயிருந்தது.

ஆனால் "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசா.55:8,9) என்று தேவன் சொல்கிறார். படைக்கப்பட்டது படைத்தவரை நியாயந்தீர்க்கும் நிலையிலில்லை, நமக்குக் கடினமாகத் தோன்றுகிறது அல்லது நம்மால் புரிந்துகொள்ள முடியாதது என தேவனுடைய நியமங்களை மாற்றி எழுதுவதற்கும் நமக்கு அதிகாரமில்லை. நம்முடைய தேவன் சர்வ வல்லமையுடையவர். அவர் செய்கிறதெதுவோ அது சரியானது. காத்திருக்கவேண்டியதே நம்முடைய பங்கு. இன்று கடினமாகத் தோன்றுகிறவைகளை ஒரு நாள் நாம் புரிந்துகொள்ளுவோம்.

ஆனால் ஒரு மனிதனாக, இந்தக் கடினமான காரியங்ககளைப் புரிந்துகொள்ள முடியாதது எனக்குப் பாரமாகயிருக்கிறது. இருந்தபோதிலும் இதை விட்டு விடவோ அல்லது பின்வாங்கவோ நான் மறுக்கிறேன். நான் எனக்காக அதிகமானவற்றைச் செய்திருக்கிறதேவனை விட்டு விலகும்படிக்கு சாத்தானாலும் அவனுடைய தூதனாலும் தூண்டப்படவோ வஞ்சிக்கப்படவோ மாட்டேன். நான் தீர்மானிக்கப்பட்டவன்! இந்த உலகமுழுவதும் தேவனுக்கு எதிராகத் திரும்பினாலும், நான் அவரை விட்டு விலக ஆயத்தமாயில்லை. என்னுடைய எல்லா மனதாலும், உணர்வாலும், ஆவிக்குரிய பலத்தாலும், நான் விசுவாசத்தில் நிலைத்திருப்பேன். நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே பின்பற்றி அவரையே சேவிப்போம்!

## நடப்புச் செய்திகள்

**1. உலக மக்கள் தொகை இந்த ஆண்டு 700 கோடியை எட்டுகிறது!**

**2. போலீஸ் வேலைக்கு தமிழர்களை தேர்வு செய்கிறது இலங்கை அரசு.**

**3. முதல் வகுப்பு வரை குழந்தைகளுக்கு நுழைவுத் தேர்வு கூடாது என்று தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.**

**4. தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்து பிப்ரவரி இறுதியில் துவங்கும் என மத்திய அமைச்சர் வாசன் தெரிவித்துள்ளார்.**

**5. அமெரிக்க அதிபர் ஒபாமா நிர்வாகத்தில் இரு இந்தியர் நியமிக்கப்பட்டுள்ளனர்.**